**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________

   (Name) ____________________

2. (Signature) ____________________

   (Name) ____________________

**Answer Sheet No. :** ..............................................

(To be filled by the Candidate)

**Roll No.** | | | | | | | | |

(In figures as per admission card)

**Roll No.** ____________________

(In words)

**Test Booklet No.**

**J—2606**

**PAPER—II**

# TAMIL

**Time : 1¼ hours]** **[Maximum Marks : 100**

Number of Pages in this Booklet : **16** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the question booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Serial No. of the booklet should be entered in the Answer-sheets and the Serial No. of Answer Sheet should be entered on this Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the oval as indicated below on the correct response against each item.

   **Example :** (A) (B) ⬬ (D)

   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the Answer Sheet given **inside the Paper I booklet only**. If you mark at any place other than in the ovals in the Answer Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your name or put any mark on any part of the test booklet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is NO negative marking.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका की क्रम संख्या उत्तर-पत्रक पर अंकित करें और उत्तर-पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं। आपको सही उत्तर के दीर्घवृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** (A) (B) ⬬ (D)

   जबकि (C) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये** उत्तर-पत्रक पर ही अंकित करने हैं। यदि आप उत्तर पत्रक पर दिये गये दीर्घवृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिन्हांकित करते है, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप उत्तर-पुस्तिका पर अपना नाम या ऐसा कोई भी निशान जिससे आपकी पहचान हो सके, किसी भी भाग पर दर्शाते या अंकित करते हैं तो परीक्षा के लिये अयोग्य घोषित कर दिये जायेंगे।
9. आपको परीक्षा समाप्त होने पर उत्तर-पुस्तिका निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पैन का ही इस्तेमाल करें।**
11. **किसी भी प्रकार का संगणक ( कैलकुलेटर ) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तर के लिए अंक नहीं काटे जायेंगे।**

## TAMIL

## PAPER – II

**Note:** **This paper contains fifty (50) multiple- choice questions, each question carrying two (2) marks. Attempt all the questions.**

**குறிப்பு :** இந்த வினாத்தாளில் ஐம்பது (50) விடை தெரி வினாக்கள் உள்ளன. ஒவ்வொரு வினாவும் இரண்டு (2) மதிப்பெண்கள கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

**1.** நடுத்திராவிட மொழி :

(A) குடகு (B) தெலுங்கு

(C) துளு (D) குரூக்

**2.** குறிஞ்சிப்பாட்டுத் தலைவியும் தோழியும் பறித்த பூ வகைகள் :

(A) 99 (B) 96

(C) 94 (D) 97

**3.** பேயனார் பாடிய திணை :

(A) குறிஞ்சி (B) மருதம்

(C) முல்லை (D) பாலை

**4.** பஞ்சமூலங்களுள் ஒன்று :

(A) வேம்பின் வேர் (B) நெருஞ்சியின் வேர்

(C) புன்னையின் வேர் (D) முருங்கையின் வேர்

**5.** முழுத்தமிழகமும் இடம்பெறுமாறு இயற்றப்பட்ட முதல் பனுவல் :

(A) தொல்காப்பியம் (B) புறநானூறு

(C) திருக்குறள் (D) சிலம்பு

**6.** பிறமொழிக் கதையைத் தழுவாதது :

(A) பெரியபுராணம்   (B) மனோன்மணீயம்

(C) பெருங்கதை   (D) ஆசிய ஜோதி

**7.** தாண்டகம் பாடிய ஆழ்வார் :

(A) ஆண்டாள்   (B) மதுரகவி

(C) திருமங்கை   (D) குலசேகரர்

**8.** 96 வகைப் பிரபந்தங்களைச் சுட்டியவர் :

(A) போப்   (B) பெஸ்கி

(C) நொபிலி   (D) இரேணியசு

**9.** திருக்காளத்திப் புராணத்தைப் படைத்தவர் :

(A) ஒருவர்   (B) இருவர்

(C) மூவர்   (D) நால்வர்

**10.** படிக்காசுப்புலவர் இயற்றியது :

(A) உலா   (B) தூது

(C) சிந்து   (D) சதகம்

**11.** சர்வசமயக் கீர்த்தனை இயற்றியவர் :

(A) கோபாலகிருட்டிண பாரதியார்

(B) அருணாசலக் கவிராயர்

(C) சுப்பிரமணிய பாரதியார்

(D) வேதநாயகர்

12. தனது நூலுக்குத் தானே உரை எழுதியவர் :

(A) வைத்திய நாத தேசிகர்

(B) தண்டபாணி தேசிகர்

(C) சிவஞான முனிவர்

(D) பவணந்தி முனிவர்

13. 'திராவிடன்' இதழின் ஆசிரியர் :

(A) பெரியார்

(B) அண்ணா

(C) திரு. வி . க

(D) ஆதித்தனார்

14. திருமாலைத் தாயாகவும் தன்னைக் குழந்தையாகவும் பாவித்துப் பாடியவர் :

(A) திருப்பாணாழ்வார்

(B) குலசேகராழ்வார்

(C) தொண்டரடிப்பொடியாழ்வார்

(D) நம்மாழ்வார்

15. இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலுக்கு மூலமாக அமைவது :

(A) மாக்பெத்

(B) ஜான் பனியன் எழுதிய துறக்கப்பயணம்

(C) மில்டன் எழுதிய இழந்த துறக்கம்

(D) சிம்பலைன்

16. **உறுதிக்கூற்று :** யாப்பருங்கலக்காரிகை என்பது ஓர் இலக்கண நூல்

**காரணம் :** அது காரிகை பற்றி அரிய யாப்பால் ஆனது

(A) (உ), (கா) இரண்டும் சரி

(B) (உ), (கா), இரண்டும் சரியல்ல

(C) (உ) சரியன்று, (கா) சரி

(D) (உ) சரி, (கா) சரியன்று

17. **உறுதிக்கூற்று** : ஆற்றுப்படை என்பது ஓர் இலக்கிய வகை

**காரணம் :** ஆற்றையும் படையையும் பற்றியது அது.

(A) (உ) சரி, (கா) தவறு

(B) (உ) தவறு, (கா) சரி

(C) (உ), (கா) இரண்டும் சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

18. **உறுதிக்கூற்று** : நச்சினார்க்கினியர் இலக்கண, இலக்கிய, சமய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்

**காரணம் :** பன்னிரண்டாம் நூற்றாண்டினராகிய அவர் 'உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியர்' எனப் போற்றப்பட்டார் .

(A) (உ) சரி, (கா) தவறு

(B) (உ) தவறு, (கா) சரி

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ), (கா) இரண்டும் சரி

19. **உறுதிக்கூற்று** : பாட்டியல் நூல்களுள் ஒன்று சிதம்பரப் பாட்டியல் ஆகும்

**காரணம் :** அது ஆசிரியனால் பெற்ற பெயர்

(A) (உ), (கா) இரண்டும் சரி

(B) (உ) சரி, (கா) தவறு

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ) தவறு , (கா) சரி

20. **உறுதிக்கூற்று** : யாப்புடைய நூற்பாவாலோ பிற செய்யுளாலோ சொற்பொருள் விளக்குமாறு இயற்றப்பட்டவை நிகண்டுகள்

**காரணம் :** மனனம் செய்யப்பட்டன அவை

(A) (உ), (கா) இரண்டும் சரி

(B) (உ) சரி, (கா) தவறு

(C) (உ)தவறு, (கா) சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

21. **உறுதிக்கூற்று** : கல்லாடனார் ஓர் உரையாசிரியர்

**காரணம் :** அவர் இயற்றியது கல்லாடம் ஆகும்

(A) (உ)சரி, (கா) சரியன்று

(B) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(C) (உ), (கா) இரண்டும் சரி

(D) (உ)சரியன்று, (கா) சரி

22. **உறுதிக்கூற்று** : அந்தாதி என்பது சொற்றொடர்நிலை எனவும் படும்

**காரணம் :** ஒரு பாடலின் ஈறு அடுத்த பாடலின் தொடக்கமாக அமைவது இதன் இயல்பு

(A) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(B) (உ) சரி, (கா) தவறு

(C) (உ) தவறு, (கா) சரி

(D) (உ), (கா) இரண்டும் சரி

23. **உறுதிக்கூற்று** : திருக்கைலாய ஞான உலா 'ஆதி உலா' எனவும் படும்

**காரணம் :** தமிழில் தோன்றிய முதல் உலா அது.

(A) (உ) சரி, (கா) தவறு

(B) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(C) (உ), (கா) இரண்டும் சரி

(D) (உ) தவறு , (கா) சரி

24. **உறுதிக்கூற்று** : புதுக்கவிதை என்பது ஓர் இலக்கிய வடிவம்

**காரணம் :** புதுவதாகப் படைக்கப்படுவது அது

(A) (உ) சரி, (கா) சரி

(B) (உ) சரி, (கா) தவறு

(C) (உ) தவறு, (கா) சரி

(D) (உ) தவறு , (கா) தவறு

25. **உறுதிக்கூற்று :** குடவோலை என்பது சோழர்காலத் தேர்தல் முறை

**காரணம் :** அக்காலத்து மக்கள் கல்வியறிவு மிக்கவர்களாக இல்லை

(A) (உ) சரி, (கா) தவறு

(B) (உ) தவறு, (கா) தவறு

(C) (உ) சரி, (கா) சரி

(D) (உ) தவறு , (கா) சரி

**நிரல் படுத்துக :**

26. யாழ் வகை

(A) பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டுயாழ்

(B) செங்கோட்டுயாழ், பேரியாழ், சகோடயாழ், மகரயாழ்

(C) மகரயாழ், செங்கோட்டுயாழ், பேரியாழ், சகோடயாழ்

(D) பேரியாழ், மகரயாழ், செங்கோட்டுயாழ், சகோடயாழ்

27. அகவல் சீர்

(A) நேர்நிரை, நிரைநிரை, நிரைநேர், நேர்நேர்

(B) நிரைநேர், நேர்நேர், நேர்நிரை, நிரைநிரை

(C) நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை

(D) நிரைநேர், நிரைநிரை, நேர்நேர், நிரைநேர்

28. சதுரங்கம்

(A) காலாள், தேர், கரி, பரி

(B) தேர், கரி, பரி, காலாள்

(C) கரி, பரி, தேர், காலாள்

(D) காலாள், தேர், பரி, கரி

29. அணிவகுப்பு வகை

(A) போகம், அசங்கதம், மண்டலம், தண்டம்

(B) அசங்கதம், மண்டலம், தண்டம், போகம்

(C) மண்டலம், தண்டம், அசங்கதம், போகம்

(D) தண்டம், மண்டலம், அசங்கதம், போகம்

30. அருவவடிவம்

(A) சிவம், சத்தி, நாதம், விந்து

(B) நாதம், விந்து, சத்தி, சிவம்

(C) விந்து, நாதம், சிவம், சத்தி

(D) சத்தி, சிவம், விந்து, நாதம்

31. அளவு

(A) நீட்டல், முகத்தல், எண்ணல், எடுத்தல்

(B) எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்

(C) முகத்தல், நீட்டல், எண்ணல், எடுத்தல்

(D) எடுத்தல், எண்ணல், நீட்டல், முகத்தல்

32. உரை

(A) அகலவுரை, பொழிப்புரை, பதவுரை, கருத்துரை

(B) பொழிப்புரை, பதவுரை, அகலவுரை, கருத்துரை

(C) பதவுரை, கருத்துரை, பொழிப்புரை, அகலவுரை

(D) கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, அகலவுரை

33. திருமாலாடல்

(A) மல், மரக்கால், குடம், அல்லியம்

(B) குடம், அல்லியம், மரக்கால், மல்

(C) அல்லியம், குடம், மல், மரக்கால்

(D) மரக்கால், மல், அல்லியம், குடம்

34. செய்யுள் வகை

(A) தொடர்நிலை, தொகைநிலை, குளகம், முத்தகம்

(B) முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை

(C) தொகைநிலை, தொடர்நிலை, முத்தகம், குளகம்

(D) குளகம், முத்தகம், தொடர்நிலை, தொகைநிலை

**பொருத்துக :**

35. (a) உமறு — 1. சுந்திரன் சுவர்க்கி

(b) கம்பர் — 2. சேந்தன்

(c) திவாகரர் — 3. சடையப்பர்

(d) புகழேந்தி — 4. சீதக்காதி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 1 | 2 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

36. (a) அப்துல்ரகுமான் — 1. வெள்ளைப் பறவை

(b) தமிழன்பன் — 2. ஒரு கிராமத்து நதி

(c) சீனிவாசராகவன் — 3. வணக்கம், வள்ளுவ !

(d) சிற்பி — 4. ஆலாபனை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

37. (a) என்றுமுள தென்றமிழ் — 1. கம்பர்
(b) என்று பிறந்தவள் என்றறியாத் தமிழ் — 2. பாரதிதாசன்
(c) உயர் தனிச் செம்மொழி — 3. பாரதியார்
(d) தமிழ் எங்கள் உயிருக்குநேர் — 4. பரிதிமாற்கலைஞர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

38. (a) முல்லைப்பாட்டு — 1. வஞ்சிநெடும்பாட்டு
(b) அகநானூறு — 2. கூடற்றமிழ்
(c) பட்டினப்பாலை — 3. நெஞ்சாற்றுப்படை
(d) மதுரைக்காஞ்சி — 4. நெடுந்தொகை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

39. (a) புனிதவதி — 1. ஆண்டாள்
(b) கோதை — 2. காரைக்காலம்மையார்
(c) வரதன் — 3. அபிராமிபட்டர்
(d) சுப்பிரமணியம் — 4. காளமேகப்புலவர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

**40.** (a) சீவகசிந்தாமணி 1. ஆசிரியப்பா

(b) திருக்கோவையார் 2. கலிவிருத்தம்

(c) மணிமேகலை 3. விருத்தம்

(d) கந்தர் அநுபூதி 4. கட்டளைக் கலித்துறை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 1 | 4 | 2 | 1 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

**41.** (a) ஏதமில் மாதவன் 1. சிவப்பிரகாசர்

(b) திவ்விய கவி 2. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

(c) கற்பனைக் களஞ்சியம் 3. இளம்பூரணர்

(d) உடையவர் 4. இராமாநுசர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

**42.** (a) திருவாரூர் உலா 1. வீரராகவ முதலியார்

(b) மூவருலா 2. தத்துவராயர்

(c) ஏகாம்பரநாதர் உலா 3. ஒட்டக்கூத்தர்

(d) சொக்கநாதர் உலா 4. இரட்டைப் புலவர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

**43.** (a) நிரல் நிறைப் பொருள்கோள் — 1. அடிநிலை திரிந்து சீர்நிலை திரியாது வருவது

(b) சுண்ணப் பொருள்கோள் — 2. சொல்நிலை மாற்றிப் பொருள் எதிர் இயைதல்

(c) அடிமறிப் பொருள்கோள் — 3. ஈரடி எண்சீர் ஒட்டு வழி அறிந்து இயற்றல்

(d) மொழிமாற்றுப் பொருள்கோள் — 4. சொல்வேறு நிலைய பொருள் வேறு நிலையல்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

**44.** (a) வனவாசம் — 1. திரு.வி.க.

(b) என்கதை — 2. உ.வே.சா

(c) என்சரித்திரம் — 3. நாமக்கல் கவிஞர்

(d) வாழ்க்கைக் குறிப்புகள் — 4. கண்ணதாசன்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 1 | 4 | 2 | 3 |

**பின்வரும் பகுதியைப் படித்துத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக.**

திரு. வி கலியாண சுந்தரர் (1883 - 1953) தமிழாசிரியராக இருந்து, பத்திரிகை ஆசிரியராகப் புகழ்பெற்று, அரசியல் தலைவராய் விளங்கி, தொழிலாளர் தலைவராகச் சிறப்புற்று, தமிழறிஞராய், எழுத்தாளருக்கு வழிகாட்டியாய்த்திகழ்ந்தவர். அவருடைய இளமையில் 1908-இல் பழைய மரபை ஒட்டிப் பெரிய புராணத்திற்கு ஒரு குறிப்புரை எழுதினார். அவ்வாறே வேறு சிறு நூல்களும் இயற்றினார். 'தேசபக்தன்' என்ற நாளிதழ் ஆசிரியராகவும் 'நவசக்தி' என்ற வார இதழ் ஆசிரியராகவும் அவர் பெற்ற அனுபவமும், பல அரசியல் சமுதாய சமயக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் பேசியும் தலைமை தாங்கியும் பெற்ற அனுபவமும் பலதுறைப் பேரறிஞர்களோடு பழகிப்பெற்ற அனுபவமும் அவருடைய எழுத்தில் அறிவு முதிர்ச்சியையும் தெளிவையும் பண்பாட்டையும் அமைத்து விட்டன. 1917-இல் அவர் எழுதிய 'மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற நூலில் அந்தத் தெளிவையும் முதிர்ச்சியையும் காணலாம். 'முருகன் அல்லது அழகு' தமிழிலக்கியத்தில் தோய்ந்து பண்பட்ட உள்ளத்தைப் புலப்படுத்துவது. 'பெண்ணின் பெருமை' பெண்களுக்கு இது வரை நாட்டில் இல்லாத பெருமையைத் தேடித் தரும் வகையில் எழுதப்பட்ட நூல். அவருடைய உரைநடை நூல்களில் சில, அவ்வப்போது மேடையில் பேசிய பேச்சையே வடித்துக் கொடுக்கப்ப பட்டவை ஆகும். 'தமிழ்த்தென்றல்' முதலான அத்தகைய நூல்களைச் சொற்பொழிவு இலக்கியம் என்று கூறலாம். தமிழுக்கு அவை புதுமையான வழி காட்டிகள். அடுத்து, இதழ்களில் அவ்வப்போது எழுதிய தலையங்கங்களைத் தொகுத்துத் தரும் 'தமிழ்ச் சோலை' முதலிய நூல்கள் உள்ளன. 'அருள் வேட்டல்' என்ற பெயரால் பழைய ஆழ்வார், நாயன்மார்களின் பாடல்களையும் அருட்பாவையும் பின்பற்றிச் சில நூல்கள் இயற்றினார். திருமால் அருள்வேட்டல், முருகன் அருள்வேட்டல், சிவனருள் வேட்டல், கிறிஸ்துவின் அருள்வேட்டல் என்பவை அத்தகையவை. புதுமை வேட்டல், பொதுமை வேட்டல் முதலானவை புதிய பொதுவுடைமைக் கொள்கையையும் சாதி முதலிய வேறுபாடுகள் இல்லாத சமுதாயத்தையும் வரவேற்கும் நெஞ்சத்தைக் காட்டுவன.

45. திரு. வி. கலியாண சுந்தரனார் ஆசிரியராகப் பணிபுரிந்த பத்திரிகை :

(A) தேசபக்தன்

(B) முருகன் அல்லது அழகு

(C) அருள் வேட்டல்

(D) பெண்ணின் பெருமை

46. **உறுதிக்கூற்று** : திரு. வி. கலியாண சுந்தரனார் ஒரு பொதுஉடைமைக் கொள்கையாளர்

**காரணம் :** அவர் புதுமை வேட்டலையும் பொதுமை வேட்டலையும் விரும்பினார்

(A) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(B) (உ), (கா) இரண்டும் சரி

(C) (உ)சரி, (கா) தவறு

(D) (உ)தவறு, (கா) சரி

47. அருள் வேட்டல் என்ற பெயரால் திரு.வி.க -வால் எழுதப்பட்டவை

1. திருமால் அருள் வேட்டல்

2. முருகன் அருள் வேட்டல்

3. கிறிஸ்துவின் அருள் வேட்டல்

4. பொதுமை வேட்டல்

(A) எல்லாம் சரியானவை

(B) 1, 2, 4 சரியானவை

(C) 1, 3, 4 சரியானவை

(D) 1, 2, 3 சரியானவை

48. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | நவசக்தி | 1. | சொற்பொழிவு இலக்கியம் |
| (b) | பொதுமை வேட்டல் | 2. | பத்திரிகைத் தமிழ் |
| (c) | சிவனருள் வேட்டல் | 3. | சமுதாயச்சீர்திருத்தம் |
| (d) | தமிழ்த் தென்றல் | 4. | பக்திப் பாடல் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 1 | 4 | 2 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

49. திரு. வி. கலியாணசுந்தரர்

1. தமிழாசிரியராகப் பணியாற்றினார்
2. இதழாசிரியாகப் பணியாற்றினார்
3. தொழிலாளர் தலைவராக விளங்கினார்
4. அரசியல் தலைவராக விளங்கினார்

**இவற்றுள்**

(A) 1, 4 சரி

(B) 2, 3 சரி

(C) 1, 2, 3 சரி

(D) நான்குமே சரி

50. திரு. வி. கலியாணசுந்தரரின் 'தமிழ்ச் சோலை'என்னும் நூல்

(A) ஒரு தலையங்க இலக்கியம்

(B) ஒரு தனித்தமிழ் இலக்கியம்

(C) ஒரு தலபுராணம்

(D) ஒரு பெண்ணிய இலக்கியம்'

- o O o -

**Space For Rough Work**